**நிகழும் சோபகிருது வருடம் மாசி மாதம் 16 ஆம் நாள் (28.02.2024)**
**புதன்கிழமை அன்று நாமக்கல் நகராட்சி நகர்மன்ற கூடத்தில் காலை 11.50 மணிக்கு**
**நடைபெற்ற அவசரக்கூட்டப் பொருள்**

**பொருள் எண்.1 :**

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட மேலப்பட்டி மேல்முகம் கிராமம், சர்வே எண்.375/3,375/4A-இல் 1.54 ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு அனுமதி கோரி திரு.A.ஆதிராம்நாத், த/பெ.ஆதிராமுலு, கதவு எண்.5/33, திருமலைசாமி தெரு, நாமக்கல் என்பவர் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்களுக்கு நேரடியாக விண்ணபித்ததின் அடிப்படையில் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்களின் ந.க.எண்.NKL/JLNCQE9D/9427/2022/TCP, நாள்.31.05.2023ஆம் தேதிய கடிதத்தில், மனைப்பிரிவின் வரைப்படத்திற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டு சாலைகள் மற்றும் பொது உபயோக இடங்களை உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டதை தொடர்ந்து இறுதி ஒப்புதல் வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மனைப்பிரிவிற்கான மூன்றாம் நபரின் **(Third Party Inspection)** 22.02.2024ஆம் தேதிய தர ஆய்வு சான்றின் அடிப்படையிலும், மேற்படி மனைப்பிரிவில் சாலை வசதி, மழைநீர் வடிகால் வசதி, குடிநீர் பகிர்மான குழாய் வசதி உள்ளிட்ட வசதிகள் செய்யப்பட்டுள்ளது மற்றும் நான்கு இடங்களில் மின்கம்பங்கள் அமைத்து மின்சார வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது அந்த நான்கு மின்கம்பங்களில் தெருவிளக்குகள் வசதி ஏற்படுத்த இந்நகராட்சிக்கு வைப்பு தொகை மனுதாரரால் செலுத்தப்பட வேண்டும் எனவும் மேற்கண்டவற்றை நகராட்சி பராமரிப்பிற்கு எடுத்துக் கொள்ளலாம் எனவும் நகராட்சி பொறியாளர் தனது 23.02.2024ஆம் தேதிய குறிப்பில் தெரிவித்துள்ளதின்படி மனைப்பிரிவு சாலைகள் ஒப்படைத்ததை ஏற்கலாம். பொது ஒதுக்கீடு இடத்திற்கான 10% தொகை ரூ.37,941/– கூர்ந்தாய்வு கட்டணம் ரூ.9375/– நகர் ஊரமைப்பு துறைக்கு செலுத்தப்பட்டுள்ளது. சாலைகள் 10.05.2023ஆம் தேதிய தானபத்திரம் ஆவண எண்.2373இன் மூலம் இந்நகராட்சிக்கு தானம் செய்யப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில், மனைப்பிரிவில் அமையும் சாலைகள் மற்றும் வடிகால்கள் நகராட்சிக்கு தானமாக ஒப்படைத்ததை ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. சாலைகள் தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டதன் அடிப்படையில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், நாமக்கல் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். NKL/JLNCQE9D/9427/2022/TCP, நாள்.31.05.2023–இல் மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கி மனைப்பிரிவு வரைபடத்திற்கு SWP/DTCP/NAMAKKAL/LAYOUT NO.198/2023 என எண்ணிட்டு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே, மனுதாரர் உரிய கட்டணங்கள் செலுத்திய பின்பு இம்மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** தானபத்திரத்தின்படி சாலைகள் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளதையும் மற்றும் பொது இட ஒதுக்கீடுக்கான 10% தொகையினை நகர் ஊரமைப்பு துறைக்கு செலுத்தியுள்ளதையும் மன்றம் ஏற்றுக்கொள்ளலாம். **(ந.க.எண்.3349/2023/எப்1)**

**தீர்மானம் எண்.125, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 2 :**

நாமக்கல் நகராட்சி அலுவலகம் 2024–2025ஆம் நிதியாண்டிற்கு தேவையான எ4, எ3, மற்றும் லீகல் தாள்கள், ஒரு குயர், இரண்டு குயர், மூன்று குயர் பதிவேடுகள், பிறப்பு, இறப்பு அறிக்கை படிவங்கள், புதிய சொத்துவரி விதிப்பு, பெயர் மாற்றம் விண்ணப்ப படிவங்கள் மற்றும் பதிவேடுகள், பிரிண்டிங் இயந்திர ரிப்பன், கணினி ரசீதுகள், எழுதுபொருள்கள், கோப்பு மூடுதாள்கள், கோப்பு அட்டைகள், பசை பாட்டில்கள், பிறப்பு, இறப்பு, கட்டிட அனுமதி விண்ணப்பங்கள், சேவை / அபராத கட்டண இரசீதுகள், அம்மா உணவக டோக்கன்கள் உள்ளிட்ட எழுது பொருட்கள் மற்றும் அனைத்து வரியினங்களின் கேட்பு அறிவிப்பு ஆண்டிற்கு 4 முறை வார்டு சபா கூட்டங்கள் நடத்தவதற்கு தேவையான எழுதுபொருட்கள் உள்ளிட்டவை கொள்முதல் செய்ய வேண்டியுள்ளது. மேற்படி எழுதுபொருட்களை அரசு சார்பு நிறுவனத்திலிருந்து கொள்முதல் மேற்கொள்ள தோராயமாக ரூ.20.00/–இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண்: 3642/2023/எப்3)**

**தீர்மானம் எண்.126, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.3 :**

நாடாளுமன்ற தேர்தல்–2024, நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட 32 வாக்குச்சாவடி மையங்களில் அமைந்துள்ள 100 வாக்குச்சாவடிகளில் சிறப்பு சுருக்கமுறை வாக்காளர் திருத்தப்பணிகள்–2024 ஆனது 27.10.2023 முதல் 09.12.2023 வரை இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி நடைப்பெற்றது. அதில் சிறப்பு முகாம்களாக 04.11.2023, 05.11.2023 மற்றும் 25.11.2023, 26.11.2023 ஆகிய நான்கு தினங்கள்

நடைப்பெற்றதில் வாக்காளர்களிடமிருந்து விண்ணப்ப படிவங்கள் பெறப்பட்டு நாமக்கல் மாவட்ட தேர்தல் அலுவலர் / ஆட்சித் தலைவர் அறிவுறுத்தலின்படி தேர்தல் அவசரம் கருதி தட்டச்சு தெரிந்த பணியாளர்களை (Date Entry) கொண்டு தேர்தல் இணையதளத்தில் பதிவேற்றம் செய்திடும் பணி முடிக்கப்பட்டு நாளதுவரை வரப்பெறும் விண்ணப்ப படிவங்கள் இணையதளத்தில் பதிவேற்றம் செய்திடும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், தேசிய வாக்காளர் தினமான **25.01.2024** அன்று தேசிய வாக்காளர் தினத்தை சிறப்பாகவும் பொதுமக்களுக்கு வாக்களிப்பது தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வண்ணம் நாமக்கல் மாவட்ட தேர்தல் அலுவலர் / ஆட்சித் தலைவர் அறிவுறுத்தலின்படி நாமக்கல் நகராட்சி பேருந்து நிலைய நுழைவுவாயில் பகுதியில் செல்பி பாய்ண்ட் மற்றும் கையொப்பமிடும் பிளக்ஸ் பேனர் வைக்கப்பட்டது. மேலும், இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலுக்காக **22.01.2024** முதல் வேட்புமனு தாக்கல் பணி நிறைவடையும் நாள் வரை வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்குதல் , திருத்தங்கள் உள்ளிட்ட படிவங்களை வாக்காளர்களிடமிருந்து பெற்று வாக்காளரின் புகைப்படத்தை ஸ்கேன், கிராப் மற்றும் படிவங்களின் தரவுகளை தேர்தல் இணையதளத்தில் பதிவேற்றம் செய்திடவும் அப்படிவங்களில் கோரப்படும் கோரிக்கைக்கு தகுந்த வாக்குச்சாவடி பாகத்தில் உள்ளீடு செய்யும் பணிகளை தட்டச்சு தெரிந்த பணியாளர்களை(Date Entry) கொண்டு மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலின் போது இந்திய தேர்தல் ஆணையம் மற்றும் மாவட்ட தேர்தல் அதிகாரிகளால் தெரிவிக்கப்படும் வழிமுறைகளின்படி தேர்தல் தொடர்பான பணிகளை மேற்கொள்ளளுதல் மற்றும் பெயர் சேர்த்தல், நீக்குதல், திருத்தம் கோரி வரப்பெறும் விண்ணப்ப படிவங்களை ஸ்கேன் செய்வதற்கு நின்ற நிலையிலான கிளிக் ஸ்கேனர் 2 எண்ணிக்கை கொள்முதல் செய்வது உள்ளிட்ட இதர செலவினங்களை மேற்கொள்ள தோராயமாக ரூ.**2.50/–** இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** தேர்தல் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க. எண். 4108/2023/எப்3)**

**தீர்மானம் எண்.127, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.4 :</u>**

**நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11 அன்பு நகர்–2 மற்றும் அன்பு நகர்–3 (STPபின்புறம்) பகுதிகளில் உள்ள குறுக்கு தெருவில் பாதாள சாக்கடை பிரதான குழாய் அமைக்கப்படாததால் அப்பகுதியில் கழிவுநீர் வெளியேற்ற இயலாத நிலை உள்ளது. எனவே மேற்கண்ட பகுதியில் பொதுமக்களின் சுகாதா நலன்கருதி புதியதாக பாதாள சாக்கடை குழாய் ஆய்வுக்குழிகள் அமைக்க வேண்டியது அத்தியாவசியமாக உள்ளது. மேற்கண்ட பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.7.70இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.**

**<u>அலுவலக குறிப்பு:</u>–மேற்கண்ட பணியை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் (ந.க. எண். 4983/2023/இ1)**

**தீர்மானம் எண்.128, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.5 :</u>**

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட பெரியப்பட்டி கிராமம், சர்வே எண்.7/1 ஏ2,7/1சி, 7/1 -இல் **1.42** ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு அனுமதி கோரி திரு.ரா.ரவிச்சந்திரன், நாமக்கல் என்பவர் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்களுக்கு நேரடியாக விண்ணப்பித்ததின் அடிப்படையில் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்களின் ந.க.எண்.NKL/35379FIZ/2024/TCP, நாள்.**24.02.2024-**ஆம் தேதிய கடிதத்தில், மனைப்பிரிவின் வரைப்படத்திற்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் சாலைகள் மற்றும் பொது உபயோக இடங்களை உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து இறுதி ஒப்புதல் வழங்குமாறு மனுதாரால் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. அதன்படி மனைப்பிரிவிற்கான மூன்றாம் நபரின் **(Third Party Inspection)** 27.02.2024–ஆம் தேதிய தர ஆய்வு சான்றின் அடிப்படையிலும், மேற்படி மனைப்பிரிவில் சாலை வசதி, மழைநீர் வடிகால் வசதி, குடிநீர் பகிர்மான குழாய் வசதி உள்ளிட்ட வசதிகள் செய்யப்பட்டுள்ளது மற்றும் நான்கு இடங்களில் மின்கம்பங்கள் அமைத்து மின்சார வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது அந்த நான்கு மின்கம்பங்களில் தெருவிளக்குகள் வசதி ஏற்படுத்த இந்நகராட்சிக்கு வைப்பு தொகை மனுதாரரால் செலுத்தப்பட வேண்டும் எனவும் மேற்கண்டவற்றை நகராட்சி பராமரிப்பிற்கு எடுத்துக் கொள்ளலாம் எனவும் நகராட்சி பொறியாளர் தனது **23.02.2024**ஆம் தேதிய குறிப்பில் தெரிவித்துள்ளதின்படி மனைப்பிரிவு சாலைகள் ஒப்படைத்ததை ஏற்கலாம். **01.02.2024** தேதிய தானபத்திரம் ஆவண எண்.**481/2024–**இன் மூலம் இந்நகராட்சிக்கு தானம் செய்யப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில், மனைப்பிரிவில் அமையும் சாலைகள் மற்றும் மழைநீர் வடிகால்கள் பூங்கா மற்றும் பொது ஒதுக்கீடு இடம் ஆகியவற்றை நகராட்சிக்கு தானமாக ஒப்படைத்ததை ஏற்றுக்கொள்ள

மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. சாலைகள் தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டதன் அடிப்படையில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், நாமக்கல் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். NKL/35379FIZ/2024/TCP, நாள்.**24.02.2024**-இல் மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கி மனைப்பிரிவு வரைபடத்திற்கு SWP/DTCP/NAMAKKAL/LAYOUT NO.47/2024 என எண்ணிட்டு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே, மனுதாரர் உரிய கட்டணங்கள் செலுத்திய பின்பு இம்மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u> :** தானபத்திரத்தின்படி சாலை, பூங்கா பொது ஒதுக்கீடு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளதை மன்றம் ஏற்றுக்கொள்ளலாம். **(ந.க.எண்.1258/2024/எப்1)**

**தீர்மானம் எண்.129, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.6 :</u>**

**நாமக்கல் நகராட்சி திருச்செங்கோடு சாலையில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள தினசரி சந்தை வளாகத்திற்கு இரவு மற்றும் அதிகாலை நேரங்களில் பொது மக்கள் மற்றும் வாகனங்கள் வந்து செல்ல போதிய வெளிச்சம் இல்லாததால் ஏற்கனவே நகராட்சி வசம் உள்ள உயர்மின் கோபுரத்தின் பழுதுகளை சரி பார்த்து புதியதாக LED விளக்குகள் பொருத்தும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.2.75 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது. மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.**

**அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம். இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1266/2024/இ3 )**

**தீர்மானம் எண்.130, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.7 :</u>**

**நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட 39வார்டு பகுதிகளிலும் திடக்கழிவுகளை சேகரித்து தரம் பிரித்து வழங்கும் பணியை மேற்கொள்ள SR Enterprises, Trichy நிறுவனத்திற்கு மூன்றாண்டு கொண்ட தொகுப்பு காலத்திற்கு கடந்த 01.05.2023அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டுவருகிறது. மேற்கண்ட நிறுவனத்தின் முதலாமாண்டிற்கான ஒப்பந்த காலம் வருகின்ற 30.04.2024 உடன் முடிவடைவதால் இரண்டாமாண்டிற்கான ஒப்பந்த காலத்தினை 01.05.2024 முதல் 30.04.2025வரை ஒப்பந்த நிபந்தனைகளின் அடிப்படையில் புதுப்பிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.**

**<u>அலுவலக குறிப்பு</u>: ஒப்பந்த நிபந்தனைகளின் அடிப்படையில் ஒப்பந்ததாரருக்கு இரண்டாமாண்டிற்கான ஒப்பந்த காலத்தினை நீட்டிக்க மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண்.6669/2021/இ1)**

**தீர்மானம் எண்.131, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.8 :</u>**

**நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 1 முதல் 39 வரையுள்ள வார்டுகளில் 2016–17ஆம் ஆண்டு முதல் புதியதாக வரிவிதிப்பு செய்யப்பட்ட சொத்துவரி விதிப்புகளுக்கு அவ்விடத்தில் ஏற்கனவே இருந்த காலிமனை வரிவிதிப்புகள் சொத்துவரி விதிப்பு செய்யப்பட்ட பின்னரும் நீக்கம் செய்யப்படாமல் கணினியில் தொடர்ந்து கேட்பு எழுப்பப்பட்டு காலிமனை வரிவிதிப்புகளுக்கான கேட்பு பட்டியலில் நிலுவை சேர்ந்து கொண்டே வந்துள்ளது.**

**மேற்கண்ட விவரப்படி ஏற்கனவே இருந்த காலிமனைகளில் புதியதாக கட்டிடம் கட்டப்பட்டு அவற்றிற்கு சொத்துவரி விதிப்பு செய்யப்பட்டுவிட்டதால் அவற்றிற்கு காலிமனை வரி வசூலிக்க இயலாது. மேலும் நகராட்சிப் பகுதியில் பழைய கட்டிடங்களை இடித்துவிட்டு புதியதாக கட்டப்பட்ட கட்டிடங்களுக்கு புதியதாக சொத்துவரி விதிப்பு செய்யப்பட்ட பின்னரும் பழைய சொத்துவரி கணினியில் நீக்கம் செய்யப்படாத காரணத்தால் அவற்றிற்கான கேட்பு தொடர்ந்து எழுப்பப்பட்டு சொத்துவரி கேட்புபட்டியலில் நிலுவை சேர்ந்து கொண்டே வந்துள்ளது. ஒரே சொத்திற்கு இரண்டுமுறை வரி விதிப்பு உள்ளதால் அவைகள் வசூலிக்க**

இயலாத இனங்களாக உள்ளது. தமிழ்நாடு நகர்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 2023 பிரிவு எண்.117இன்படி வசூலிக்க இயலாத இனங்களுக்கான கேட்பினை நீக்கம் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்டவாறு வசூலிக்க இயலாத 702 வரி இனங்களுக்கான அரையாண்டு கேட்பு தொகை மொத்தம் ரூ.479749/-ஐ புதிய வரிவிதிப்பு செய்யப்பட்ட காலத்திலிருந்து நீக்கம் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>** மன்றம் அனுமதி வழங்கலாம். **(ந.க.எண். 1102/2022/அ1)**

**தீர்மானம் எண்.132, அனுமதிக்கப்பட்டது.**

ஆணையாளர்,
நாமக்கல் நகராட்சி.